Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 192/2021** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW1** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | மணிகண்டன் |
| Father/Husband Name | : | பாண்டி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2024

(எதிரிகள் 1, 2 ஆஜர்.)

முதல் விசாரணை–

நான் தற்போது கமுதி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.11.2019 ம் தேதி நான் மண்டபம் காவல் நிலையத்தில் காவலராக பணியில் இருந்தபோது காலை 10.30 மணிக்கு மண்டபம் வட்ட காவல் ஆய்வாளர் மாயா ராஜ லெட்சுமி அவர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் ஆய்வாளருடன் நான், சார்பு ஆய்வாளர் சிராஜுதீன், காவலர் அன்பு செல்வன் ஆகியோர்கள் மண்டபம் ஆய்வாளரின் வாகனத்தில் மண்டபம் சுடுகாடு பகுதியில் ரோந்து சென்றபோது

அய்யனார் கோவில் அருகில் காலை 11.00 மணியளவில் ஆஜர் எதிரி முரளிதரன் என்ற அருண் கையில் கருப்பு நிற கவருடன் அங்கு ஓவர் ஓவர் என்று பேசிக் கொண்டிருந்தவரை போலிசார் பார்ட்டியாகிய எங்களை பார்த்த உடன் ஓட ஆரம்பித்தார். நாங்கள் விரட்டிப் பிடித்து அவரை ஆய்வாளர் விசாரித்தபோது முன்னுக்குப்பின் முரணாக பேசினார். அதன் பிறகு அவர் வைத்திருந்த கருப்பு நிற பையை சோதனை செய்ததில் அதில் இந்திய கள்ளப்பணம் ரூ.500/– மதிப்புள்ள நோட்டுக்கள் 201 எண்ணிக்கை வைத்திருந்தார். பின்பு எதிரியை ஆய்வாளர் எங்கள் முன்பு கைது செய்தார். அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் எங்கள் முன்பு பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், சார்பு ஆய்வாளர் சிராஜுதீன் என்பவரும் கையெழுத்து செய்தோம்.

குறுக்கு விசாரணை – இல்லை.